வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 12.2.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் இளையோர் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து அதிக அளவு முதலீடு செய்ய உலக நாடுகள் முன் வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க பிரஞ்ச் நகரமான மார்சேயில் முதல் இந்திய துணை தூதரகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

உலக எரிசக்தி நுகர்வில் இந்தியாவின் பங்கு வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் கிட்டதட்ட 2 மடங்காக உயரும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற புதுச்சேரி சட்டப் பேரவை கூட்டத்தில் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக 700 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டிற்கு அனுமதி பெறப்பட்டது.

மோடி

இந்தியாவின் இளையோர் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து இந்தியாவில் அதிக அளவு முதலீடு செய்ய உலக நாடுகள் முன் வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்த செயற்கை நுண்ணறிவு செயல் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி திரு சுந்தர் பிச்சையை பிரதமர் சந்தித்துப் பேசினார். இந்த

சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் இந்தியா செயற்கை நுண்ணறிவில் குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களை அடைந்து வருவதாகவும், அதை பொது நலனுக்காக பயன்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார். பிரதமர் உடனான இந்த சந்திப்பு குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள கூகுள் நிர்வாக அதிகாரி திரு சுந்தர் பிச்சை இந்தியாவிற்கு செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் அபரிமிதமான வாய்ப்புகள் மற்றும் இந்தியாவில் டிஜிட்டல் மாற்றத்தில் நெருக்கமாக இணைந்து பணியாற்றக் கூடிய வழிகள் குறித்தும் விவாதித்ததாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*மோடி-பிரான்ஸ்*

வரலாற்று சிறப்பு மிக்க பிரஞ்ச் நகரமான மார்சேயில் முதல் இந்திய துணை தூதரகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடியும், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரான் இன்று கூட்டாக திறந்து வைத்தனர். முன்னதாக இரு தலைவர்களும் மார்சே நகரத்தில் உள்ள இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினர் அதனைத் தொடர்ந்து முதல் மற்றும் 2-ஆம் உலகப் போரின் போது தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த இந்திய வீரர்களுக்கு மசார்குஸ் போர் கல்லறையில் இருதலைவர்களும் அஞ்சலி செலுத்தினர். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு...............

(வாய்ஸ்)

*ஹர்தீப் சிங் புரி*

உலக எரிசக்தி நுகர்வில் இந்தியாவின் பங்கு வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் கிட்டதட்ட 2 மடங்காக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார். இந்திய எரிசக்தி வாரம் கொண்டாடப்படுவதை ஒட்டி, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2 நாள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் உலக எரிசக்தி சந்தைகளின் மையமாக இந்தியா திகழ்கிறது என்றும் உலக மக்கள் தொகையில் 17

சதவிகிதத்தைக் கொண்டுள்ள இந்தியா உலகின் 3-ஆவது பெரிய எண்ணெய் நுகர்வோராகவும், 4-ஆவது அதிக அளவு இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்யும் நாடாகவும் உள்ளது என்றார். 21-ஆம் நூற்றாண்டின் தலைவிதியை தீர்மானிப்பதில் எரிசக்தி தொடர்பான புதிய ஒழுங்கு முறை கொள்கைகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

*பரிக் ஷா பே சர்ச்சா*

மாணவர்கள் தோல்வி குறித்த பயத்தை விடுத்து தங்களது வலிமையின் மீது கவனத்தை செலுத்த வேண்டுமென்று மன நல ஆலோசகரும் திரைப்பட நடிகையுமான தீபிகா படுகோனே வலியுறுத்தி உள்ளார். பரிக் ஷா பே சர்ச்சாவின் 2-ஆவது பகுதியாக இன்று மாணவர்களிடையே கலந்துரையாடிய அவர் மன அழுத்தம் ஏற்படும் பொழுது அதை தெளிந்த மனதுடனும் தன்னம்பிக்கையுடனும் எதிர்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார். தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை போக்கும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி மாணவர்களிடையே உரையாற்றியதை மேற்கோள்காட்டிய அவர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த மாணவர்கள் தயங்க கூடாது என்றும் தங்கள் உணர்வுகளை அடக்கி வைக்காமல் பெற்றோர்களுடன் அல்லது நண்பர்களுடன் வெளிப்படையாக பேச வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பள்ளிகளில் நடக்கும் சிறிய செயல்பாடுகள் கூட சில நேரங்களில் மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்க கூடியதாக இருக்கலாம் என்றும் பாட புத்தகத்திற்கு அப்பாற்பட்ட ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டியதன் அவசியம் குறித்தும் மனநல ஆலோசகரான தீபிகா படுகோனே வலியுறுத்தினார்.

*வரி வசூல்*

நடப்பு நிதியாண்டின் நாட்டின் நேரடி வரி வசூல் 17 லட்சத்து 78ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது. கடந்த 2023-24ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது நடப்பு 2024-25-ஆம் நிதியாண்டில் மொத்த நேரடி வரி வசூல் 19 சதவிகிதத்தைத் தாண்டி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனிநபர் வருமான வரி வசூல் நடப்பாண்டில் 9 லட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் பெரும் நிறுவன வரி வசூல் 7 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயை எட்டி உள்ளது என்றும் மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சத்குரு ரவிதாஸ்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சத்குரு ரவிதாசின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள காணொளி பதிவில் மதிப்பிற்குரிய புனித சத்குரு ரவிதாஸ் அவர்களின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதைக்கு உரிய வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். சமூகத்தில் இருந்து பாகுபாட்டை ஒழிக்க அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்றும், சேவை உணர்வு, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் நிறைந்த அவரது செய்திகள் சமூகத்தின் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்கான வழிகாட்டும் ஒளியாக எப்போதும் திகழும் என்று தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி சட்டப் பேரவை*

இன்று நடைபெற்ற புதுச்சேரி சட்டப் பேரவை கூட்டத்தில் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக 700 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பேரவையில் அனுமதி பெறப்பட்டது. முன்னதாக இன்று காலை 9.30 மணிக்கு சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் திருக்குறள் வாசித்து சபை நிகழ்வுகளை தொடக்கி வைத்தார். முதல் அலுவலாக முன்னாள் முதலமைச்சர் எம்டிஆர் ராமசந்திரன், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நீலகங்காதரன், காத்தவராயன், கர்நாடக முன்னாள் முதலமைச்சர் கிருஷ்ணா, தொழிலதிபர் ரத்தன் டாடா, இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் செரியன் ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சபை உறுப்பினர்கள் 2 நிமிடம் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினர். சபையின் அடுத்த அலுவல் தொடங்கிய போது குறுக்கிட்டுப் பேசிய எதிர்கட்சித் தலைவர் திரு சிவா, மத்திய அரசு புதுச்சேரியைத் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது என்றும், நிதி கமிஷனில் புதுச்சேரியை சேர்க்கவில்லை என்று மத்திய பட்ஜெட்டில் புதுச்சேரிக்கு கூடுதல் நிதி வழங்கவில்லை என்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளை

கூறினார். அப்போது சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் குறுக்கிட்டு ஃபெஞ்சல் புயல் நிவாரணமாக மத்திய அரசு 61 கோடி ரூபாய் வழங்கி உள்ளது என்றார். அப்போது பேசிய உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் மத்திய அரசு புதுச்சேரிக்கு தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருகிறது என்றும் மத்திய அரசின் ஒத்துழைப்போடு தான் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் கூறினார். தற்பொழுது எத்தனை கோடி ரூபாயில் பணிகள் நடைபெறுகின்றன என்று பார்க்க வேண்டும் என்றும் கடந்த 3 நாட்களில் காலாப்பட்டு பகுதிகளில் 30 கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார். சட்டசபை நிகழ்வுகள் குறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்கள்.

மோடி- சோப்ரா

ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவின் பிட்-இண்டியாவின் முக்கியத் துவத்தை வலியுறுத்தும் விதமான கட்டுரைக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார். உடற்தகுதியை மேம்படுத்துவது குறித்து அந்தக் கட்டுரையில் நீரஜ் சோப்ரா தெரிவித்துள்ள ஆலோசனைகளை பாராட்டி உள்ள பிரதமர் நீரஜ் சோப்ராவின் நுண்ணறிவு மற்றும் ஊக்கமளிக்கும் விதமான இந்த கட்டுரை உடல் பருமனை எதிர்த்து போராடி ஆரோக்கியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது என்று சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

அஸ்வினி வைஷ்ணவ் (9)

இந்தியாவின் செமி கண்டக்டர் துறையில் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய அமெரிக்காவின் லேம் ஆராய்ச்சி நிறுவனம் முன் வந்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இது இந்தியாவின் செமி கண்டக்டர் துறையில் மேலும் ஒரு மைல் கல் என்று

மகிழ்ச்சி தெரிவித்துள்ள அவர் பிரதமர் திரு நரேந்திர மோடியின் செமி கண்டக்டர் துறையை மேம்படுத்துவத்றகான தொலைக்கு பாதைக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று தமது சமூக ஊடகப் பதிவில் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

*தயானந்த சரஸ்வதி*

பிரதமர் திரு நரேந்திர மோடி, மகரிஷி தயானந்த சரஸ்வதி அவர்களின் பிறந்த நாளில் அவருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் மகரிஷி தயானந்த சரஸ்வதி, அறியாமை, மூடநம்பிக்கை, மற்றும் ஆடம்பரம் குறித்து சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தனது வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டார் என்று தெரிவித்துள்ளார். கல்வி, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கான மகரிஷி தயானந்தின் முயற்சிகள் நாட்டு மக்களுக்கு எப்போதும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதியின் பங்களிப்பு ஈடு இணையற்றது என்று தெரிவித்துள்ளார். குழந்தை திருமண முறையை ஒழிக்க பாடுபட்டவர் என்றும், விதவை மறுமணத்திற்கு ஆதரவு அளித்தவர் எனவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் இளையோர் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து அதிக அளவு முதலீடு செய்ய உலக நாடுகள் முன் வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க பிரஞ்ச் நகரமான மார்சேயில் முதல் இந்திய துணை தூதரகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

உலக எரிசக்தி நுகர்வில் இந்தியாவின் பங்கு வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் கிட்டதட்ட 2 மடங்காக உயரும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற புதுச்சேரி சட்டப் பேரவை கூட்டத்தில் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக 700 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டிற்கு அனுமதி பெறப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது